ஓம்

"ம்ருத்திகை சஞ்சீவி பர்வத" மென்னும்

திருக்கழுக்குன்றம்

கிரிப்பிரதக்ஷிண சாலை-வாயு திக்கில்

சஞ்சீவி மலை மருந்தைக் காட்டும்

# திருவடிக் கோயில் மான்மியம்.



இந்நூலாசிரியர்:- சை. ர. நமசிவாய ராஜயோகி

No.
7 = OCT 1962

...ன செட்டி அண்ட் சன்.

...க்ட் அண்ட் புத்தகசாலை.

...ழுக்குன்றப். (P. O.) [விலை அணா 1.

Q23·38·2112JK
N32
185814

# நவசக்தி உப்பு கலந்த

"கர்மரோக ஹரி" என்னும்

# மன்மத சிந்தாமணி லேகியம்

10-பலம் டப்பி 1-க்குரு. 3-8-0. தபாற்கூலி யுட்பட ரூ. 4-0-0

☞ ஏழாளை பலங்கொடுக்கும். சீற்றப்போன இந்திரியத்தை உறதிப்படுத்தும்; தாது விருத்தியாக்கும்; கனிவாய்மையைச் சேதிக்கும். பித்த ரோகங்களைக் கண்டிக்கும். சரீரம் புஷ்டியாகி வஜ்ரம் போலிருக்கும்; சந்தான விருத்தி உண்டு பண்ணும்; ஸ்திரீகளுக்குண்டாகும் பலவகை சுக்கரோகங்களைக் கண்டிக்கும்.

உப்பு சேர்க்காமலிருந்தால்

10-பலம் டப்பி 1க்கு ரூ 2-8-0. தபாற்கூலி யுட்பட ரூ. 3-0-0

ஆயுர்வேத - யூநாநி முறையில் செய்து முடித்த

# மலச்சிக்கல் நிவாரணி.

10-பலம் டப்பி 1-க்கு விலை ரூபா 2 0 0

தபாற்கூலி யுட்பட ரூபா 2 8 0

☞ இதில் சீமை அத்திப்பழம், கிராக்ஷி, சீனைகற்கண்டு, நெய் முதலியவற்றோடு, பச்சிலை-வேர் கொடி கிழங்கு தினுசுகள் சேர்ந்தச்செய்யப் பெற்று, சாப்பிடுதற்கு மிக ருசிகரமாயிருக்கும். இரவில் நித்திரைசெய்யுமுன் செச்சைக்காயளவு சாப்பிட்டு உறங்கினால், காலையில் சிக்கலின்றி மலம் கழியும். பலவித வாய்வுரோகங்களைக் கண்டிக்கும். பசி தீபனம் உண்டாகும். இது கைகண்ட அநுபவம்; மலச்சிக்கல் கொண்டசிலர், விளக்கெண்ணை சாப்பிடுகிறார்கள்; சில சமயம் குளிச்சிபைத்தந்து, சுரமுதலிய உண்டாகும். மேலும், அந்த எண்ணை மலசிக்கலை ஒருவாறு நீக்கினாலும், வாய்வுகளைக் கண்டிக்காது.

சை. ர. நமசிவாய ராஜயோகி அவர்கள் எழுதிய

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ முத்துக் குமரர சுவாமி ஆலய வைபவம் | 0-6-0 |
| 2. | ஆயுர்வேதஆசான்தெளிவானவசனம்(சிறந்தவபித்திய நூல்) | 2-0-0 |
| 3. | திருக்கழுக்குன்ற ஸ்தலபுராணம் (40-பக்கம்) | 0-2-0 |
| 4. | ,, ,, (12-பக்கம்) | 0-0-3 |
| 5. | ,, ,, (400-பக்கம்) | 2-0-0 |
| 6. | ஸ்ரீ திரிபுரசுந்தரி ஸ்தோத்திரம் | 0-0-3 |
| 7. | பக்ஷிதரிசன தேவ ரஹஸ்ய படம் 24 × 16 காகிதம் | 0-0-9 |
| 8. | ,, படம் 8 × 4 | 0-0-3 |
| 9. | ,, அட்டை 8 × 4 | 0-0-6 |

☞ விபரமான கேட்லாக் இனமாக அனுப்புகிறோம்.

ஓம்
சிவமயம்.

"ம்ருத்திகை சஞ்சீவி பர்வத"

7 OCT 1932

திருக்கழுக்குன்றம்

கிரிப்பிரதக்ஷிண சாலை வாயு திக்கில்

சஞ்சீவி மலைமருந்தைக் காட்டும்

# திருவடிக் கோயில் மான்மியம்.

## ஸ்ரீ வேதகிரி மஹிமை-மலைமருந்து பாடல்கள்.





ஆயுர்வேத பண்டிதர்

**S. R. நமசிவாய ராஜயோகி**

அவர்களால் தொகுக்கப்பட்டது.

பிரசுரித்தோர்:—

**சை. இரத்தின செட்டி அண்ட் சன்,**

ஆரியன் டிராக்ட் புத்தகசாலை

திருக்கழுக்குன்றம் (P. O.)

1932] [ஆங்கிரச ஸு

Printed at the Sri Adimulam Press, No. 20.
Perumal Kovil Garden St., Sowcarpet, Madras.

ஓம்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

திருவடிக்கோயில் மான்மியத்தைப்பற்றி திருக்கழுக்குன்றம் ஸ்தலபுராணத்தில் குறிப்பிடவில்லையாயினும், கர்ண பரம்பரையாய் வயதுமுதிர்ந்த பெரியோர்களால் கேள்விப்பட்டதை, இங்கு ஒருவாறு சுருக்கமாக எழுதினேம். ஒவ்வொரு விஷயமும் யுக்திக்கும் புத்திக்கும் அனுபவத்துக்கு மியன்றதாயின், அது உண்மை யென்றே மதித்திடல் வேண்டுமென்பது அறிவுடையோர் கொள்கை. ஆதியில் திருவடிச் சிலர் உருவத்தைப் பிரதிஷ்டை செய்த பெரியார் யாவராயினும், அன்போடு அக்கயிங்கரியத்தை ஏற்றுக்கொண்ட பரம்பரையார், திருக்கழுக்குன்றம் தேசிமுகப்பேட்டையில் வாழும் செங்குந்தபரம்பரையில் சந்நியாசக்கோலம் பூண்டிருந்த மிளகுபண்டாரம்; அவருக்குப்பின் வேதகிரி முதலியார் பின்னர் காத்தவராய முதலியார்; இவர் குமாரர் குழந்தைவேலு முதலியார் இன்றுவரையும் அத்திருவடிக்கு பூஜை முதலிய செய்து வருகிறார்.

S. R. N. Rajayogi.

# ஓர் விண்ணப்பம்.

இந்த திருவடிக்கோயில் பூஜை சாமான் வைப்பதற்குப் போதுமான இடவசதியில்லாமை அறிந்து, பக்தகோடிகள் அநேகர் அந்த இடத்தைச் சிறிது விசாலமாக்க வேண்டுகின்றார்கள். அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற அடியேன் சக்தியற்றவனா யிருக்கின்றேன். பக்தி சிரத்தையிற் சிறந்த கனதனவான்கள் அத்திருப்பணி சுகமாக நிறைவேறத் தத்தம் சக்திக்கியைந்தவாறு உதவி செய்வார்களெனப் பிரார்த்திக்கின்றேன்.

☞ இத்திருவடிக்கோயில் மான்மியம் - திருக்கழுக்குன்றம் ஸ்தலபுராணங்கள் - பக்ஷிதரிசன படங்கள் மலைமருந்துமுதலிய எம்மிடம் கிடைக்கும்; வேண்டுவோர் எமக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்,

☞ கா-குழந்தைவேலு முதலியார்.

திருவடிக்கோயில் பூஜை,

தேசிமுகப்பேட்டை
திருக்கழுக்குன்றம்.

183824

சிவமயம்.

"ம்ருத்திகை சஞ்சீவி" பர்வதம் என்னும்

திருக்கழுக்குன்றம்

கிரிப்பிரதக்ஷிணசாலை வாய்வுதிக்பாகத்திலுள்ள

ஸஞ்சீவிமலை மருந்தைக் குறிக்கும்

# திருவடிக்கோயில்

## மான்மியம்.

604
294.535

கடவுள் வணக்கம்.

வெண்பா.

விநாயகனை வேலவனை வேத வெற்பிற்றானுறையும்
பிநாகிதனை பெண்ணினல்லாள் பெண்மணியை-இனுதகற்றி
தக்கசுக மீயுதிரு தானுடைய மால்தனையும்
ஒக்கயனை வாணிதனை ஓது.

## திருக்கழுக்குன்ற மஹிமை.

திருக்கழுக்குன்றமென்று வழங்கும் "ம்ருத்திகை சஞ்சீவி பர்வதம்" என்னும் கிராமம், செங்கல்பட்டுக்குத் தென்கிழக்கு 9-வது மயிலுள்ள புராதன க்ஷேத்திரம். தெற்கு வடக்கு 2½ மயில்;

கிழக்கு மேற்கு 2-மயில்; ஜனத்தொகை சுமார் 5000; நான்கு பக்கங்களிலும் மலைகளால் சூழப்பெற்ற தாகையால், இதைக் குறிஞ்சி நாடென்றும்-மலைநாடென்றும் பொருள் இலக்கணிகள் சொல்வார்கள். இது தொண்டமண்டலம் 24-பிரிவுகளில், களத்தூர் கோட்டத்தைச் சேர்ந்தது. இந்த கிராமத்துக்குத் தென்கிழக்கு மூலையில், உருத்திரகோடி க்ஷேத்திரம்; இதுதான் இந்த கிராமத்துக்கு ஆதி; கோடிருத்திரர்களால் பூஜிக்கப்பெற்றது; சுவாமி பெயர் உருத்திர கோடீஸ்வரர்; அம்பாள் பெயர் அபிராமி அம்மையார். தீர்த்தம் உருத்திரகோடி தீர்த்தம். நேர் கிழக்கு மஹாபலி புரம் கடற்கரையோரமா யுள்ளது, ஆதியில் சிவக்ஷேத்திரம் அங்கு இருந்ததாக, இவ்வூர் ஸ்தல புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கருங் கல்லில் அற்புதமாகச் செய்யப்பெற்ற சிற்பவேலைகள் நிரம்பியுள்ளது. தெற்கில் சதுரங்கப் பட்டணம் என்கிற கடற்றுறைப்பட்டிணமுள்ளது. ஓர் காலத்தில் டச்சுக்காரர் ஆளுகையிலிருந்து, அவர்களது கோட்டை ஒன்று இருக்கிறது. வடகிழக்கு சுமார் 15-மயிலுக்கப்பால் சிதம்பர சுவாமிகளால் நிர்மாணிக்கப் பெற்ற திருப்போரூர் என்னும் முருகர் கோயில் உள்ளது. வடமேற்கில் திரு இடைச்சுரம் (திருவடிசூலம்) என்கிற புராதன சிவக்ஷேத்திரமும், ஹநுமந்தபுரம் என்கிற வீரபத்திரர் ஆலயமும் உள்ளது. மேற்கில் பாலாற்றங்கரை ஓரத்தில் புலிப்பர் கோயில் என்கிற வியாக்கிர பாதபுர க்ஷேத்திரம்; அங்கு ஸ்ரீமந் நடராஜமூர்த்தி-சிவகாமி அம்மையாரோடு நிருத்தம் செய்கிற காக்ஷி சொல்லத்தரமல்ல.

## வேதகிரி மஹிமை.

இந்த திருக்கழுக்குன்றம் கிராம மத்தியில் 500 அடி உயரமுள்ள மலை ஒன்று இருக்கிறது. அம்மலையானது இருக்கு-யசுர்-சாமம்-அதர்வணம் என்னும் நான்கு வேதங்களே நான்கு மலைகளாகவும், அதர்வண வேத சிரஸில் சிவபெருமான் வாழைக் குருத்துப் போல் சுயம்பு மூர்த்தியாய். இந்திரன்-பிர்ம்மா-மஹாவிஷ்ணு-சோமாஸ்கந்தர்-காசி ஓங்கார கடத்தில் கழுகு முநிவர்களுக்கு உபதேசித்த தக்ஷிணாமூர்த்தி-போகசக்தி முதலிய வைபவத்தோடு எழுந்தருளி


யிருக்கிறார். அச்சுயம்பு மூர்த்திக்கு யாதொரு கெடுதியும் வாரா வண்ணம் சிவலிங்கம் ஒன்று கவசமாகப் பெரியோர்கள் அமைத்திருக்கிறார்கள். இந்த ஸ்தல மான்மியம் ஸ்காந்த புராணம் நந்தீஸ்வர சம்வாதத்திலும்,பவுஷியோத்தர-லிங்க புராணங்களிலும் வெகு உன்னதமாகக் கிரந்த ஸ்லோகத்தில் உள்ளது. அதை அனுசரித்து உழலூர்—அந்தகக்கவி—வீர ராகவ முதலியார்,843 தமிழ்ப்பாசுரங்கள் 21-அத்தியாயங்களாகப் பிரித்து, திருக்கழுக்குன்ற ஸ்தலபுராணம் என்னும் பெயருடன் எழுதியிருக்கிறார். இவ்விரு புராணங்களையும் அநுசரித்து, சென்னை ஆயுர்வேதபண்டிதர். சை. ர. நமசிவாய ராஜயோகி என்பார் தமிழ்வசன நடையாக 400 பக்கங்கொண்ட புத்தகம் ஒன்றும், 40 பக்கம் புத்தகம் ஒன்றும், லக்ஷக்கணக்காகப் பிரசுரித்து வெளியிட்டு விற்கிரயித்து வருகிறார். இப்பதிப்புக்கள் பக்த சிரோண்மணிகள் யாவருக்கும் இந்த ஸ்தல மஹிமையை எளிதில் உணர உபயோகமாக இருக்கிறது.

ஸ்ரீவேதகிரியைப் பூஜித்து வரம் பெற்றவர்கள்: (1) கோடி ருத்திரர்கள் (2) பிர்ம்மா (3) விஷ்ணு (4) தேவேந்திரன் (5) ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுள் (6) 12-சூரியர்கள் (7) கங்கையாதி நதிகள் வருணராஜனோடு (8) சந்திரன் (9) அஷ்டவசுக்கள் (10) மாயீகன் என்னும் அசுரன் (11) மார்க்கண்டேயர் (12) சுரகுரு அரசன் (13) அஷ்டகழுகுமுநிவர்கள் (14) முநிகணங்கள் (15) நந்தியந்தேவர், இவர்கள் தவிர முநிவர்கள் ரிஷிகள் சித்தர்கள் முதலானோர் பூஜித்துப் பேறு பெற்றார்கள். இதனால் இந்த க்ஷேத்திரத்துக்கு உருத்திரகோடி என்றும், வேத நாராயணபுரம் என்றும், பிரமபுரி என்றும், வசுபுரி, முநிகணநாதபுரம் என்றும், இந்திரபுரி என்றும், நந்திபுரி என்றும், கழுகாசலம்—கழுக்குன்றம் என்றும் பல நாமங்கள் பெற்று விளங்குகின்றது.

---

## திருவடிக் கோயிலுக்கு விளக்கு தர்மம் செய்கிறவர்கள் பலர். அவர்களுள்

1. சி. சஞ்சீவிசெட்டி கம்பெனியார்: சென்னை.
2. க. கணபதிசாமி முதலியார்: சென்னை.
3. G. என். வெங்கிடேசபெருமாள் செட்டியார்: சென்னை.



திருமலைக்கோயில் — பக்ஷிதரிசனம்.

## க்ஷேத்திரத்தில் நடக்கும் அதிசயங்கள்.

தினசரி இரண்டு கழுகுபக்ஷிகள் திருமலையில் 'சைவப் பண்டாரம் கொடுக்கும் சக்கரை-நெய் சேர்ந்த அன்னத்தைச் சாப்பிட்டுப் போகின்றன. 12-வருஷத்துக் கோர்தரம் சங்க மஹா தீர்த்தத்தில் சங்கம் பிறக்கிறது. (18-2-1909—27-4-19ம் வருஷத்தில் பிறந்தது.) 12-வருஷத்துக்கோர் தரம் கங்கையாதி மூன்றரைக்கோடி நதிகள் தம் நாயகன் வருணராஜனிடம் ஊடல்கொண்டு, சண்டையிட்டு, கோதாவரி கோடீஸ்வரர் ஆக்கினையால், இந்த தீர்த்தத்தில் வந்து முழுகித் தங்கள் மாற்சரியத்தைத் தீர்த்துக்கொண்டார்கள்.

இந்த வைபவம் குருபகவான் கன்னியாராசிக்கு வரும்போது நடக்கும். 1921ஸ்ரீ அதாவது துந்துபிஸ்ரீ ஆவணிமீ 1வ ஸ்ரீவேதகிரிப்பெருமான் பஞ்சமூர்த்திகளோடு அதிகாரநந்தி வாகனத்தின் மீதிவர்ந்து சங்க தீர்த்தத்துக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுக்கும் வைபவமும், அன்றிரவு லக்ஷதீபம்-திருக்கல்யாணம்-ரிஷபவாகன சேவை முதலியவும் நடந்தேறிற்று.(ஸ்ரீமுகஸ்ரீ ஆடிமீ 31வ இந்த சங்கதீர்த்த மேளா புண்ணியகாலம் நடைபெற வேண்டியிருக்கிறது) தேவேந்திர பூஜையென்று சொல்லும் இடிஅபிஷேகம் 12-வருஷத்துக்கோர் தரம் திருமலையில் நடைபெறுகிற வழக்கம். (1889-1921 வருஷங்களில் நடைபெற்றது) அதன்பின்னர் நடைபெறவில்லை. ஆயினும் (1931-ல்) திருமலைக்கோபுரப் பிரகாரத்தில் இடி விழுந்தது. இது தவிர, ஹிமசேது பரியந்தமுள்ள பக்தஜனங்கள் தினசரி பக்ஷி தரிசனத்தும் ஸ்வாமி அம்பாள் தரிசனத்துக்கும் வந்து போகிறார்கள். பக்ஷிதரிசனம் பாபவிமோசனம் என்பார்கள். இந்த க்ஷேத்திரத்துக்கு அருகாமையிலுள்ள ஜனங்கள், இவ்விடம் வந்து மண்டலக் கணக்காகத் தங்கி, கிரிப்பிரதக்ஷிணம்-சுவாமி அம்பாள் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, தத்தம் கர்மரோகங்களை நீக்கிக்கொண்டு, இஷ்டகாம்யார்த்த சித்தி பெறுகிறார்கள். நூற்றுக்கணக்கான ஜனங்கள் செவ்வாய்க்கிழமை தோறும் கிரிப்பிரதக்ஷிணம் செய்து வருகிறார்கள். இத்தகைய அற்புதங்கள் நிறைந்த இக்க்ஷேத்திர மகிமையைப்பற்றி அப்பர்-சுந்தரர்-சம்பந்தர் - மாணிக்கவாசகர்-பட்டினத்தடிகள்-திருப்போரூர்-சிதம்பரசுவாமிகள், திருப்புகழ் நூலாசிரியர் அருணகிரிநாதர் முதலிய மஹான்கள் திருப்பாசுரங்கள் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நிலை
183814

## திருவடிக்கோயில் மான்மியம்.

கிரிப்பிர தக்ஷிணவழியில் கோடிவிநாயகர் கோயிலினருகேயுள்ள திருவடிக்கோயில் மான்மியத்தைப் பற்றி இங்கு சிறிது கூறுவாம்.

ஓர் காலத்தில் கர்ம வியாதியினால் பீடிக்கப்பட்டான் ஒருவன், தனக்குள்ள ரோகத்தைப்பற்றிப்பல வயித்தியர்களிடம் ஆலோசித்து,

அநேகவகை வேர்-கொடி-கிழங்கு தினுசுகள் சேர்ந்த ஔஷாதிகளைச் சாப்பிட்டான். கிரமமான பத்தியத்தோ டிருந்தான்; தம்குல தெய்வத்துக்குப் பிரார்த்தனை செய்து பூஜித்தான். நவக்கிரக சாந்தி செய்தான்; அன்னதானம் செய்தான். சாஸ்திர ரீதியாகப் பெரியோர் கட்டளையிட்ட படியான சிகிச்சைகளை யெல்லாம் செய்தான். அவனது கஷ்டம் ஒரு சிறிதும் நீங்காமல், குளிசம் கட்ட குளி இரட்டித்தது என்னும் கதை போல் வியாதிகள் பலவாகிக் கஷ்டங்களும் அதிசப்பட்டது. ஈதறிந்து அவன் மனோசஞ்சல மடைந்து "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், பட்டினியும் பசியுமாய் வாடி வருந்தினாலும், சரீரத்தில் பாதையில்லாதிருப்பதே மேல்; ஜெகத்தைக் கொடுத்தாயினும் சுகத்தைவாங்கு என்பது பெரியோர் வாக்கு; பெரியோர்கள் சாஸ்திரீயமாய்ச் சொல்லிய மணிமந்த்ரங்கள் யாவும் செய்து பார்த்தோம். வயித்திய சிகிச்சைகள் பலவும் செய்தோம். ஒன்றிலும் குணமாகவில்லை. நாம் முன்செய்த கர்மவினைகளோ அபாரமாக இருக்கும் போலும்; சரீர பாதையோ பொறுக்க முடியவில்லை. இத்தகைய சரீரத்தோடுகூடி அவஸ்தைப் படுவதென்றாலோ, நம்மால் சாத்தியமில்லை; அதனால் இந்த சரீரத்தைத் தியாகம் செய்வோம்; அதனாலுண்டாகும் தோஷம் நம்மைச் சார்ந்தாலும் பாதகமில்லை" என்று பலவாறு சிந்தித்தான். கண்காணா இடத்திற் சென்று பிராணத்தியாகம் செய்வோமென்று மனோ திடங்கொண்டான். புறப்பட்டு வெகுதூரம் நடந்து வரும் வழியில், திருமலை யொன்றையும் அதன்மீது ஓர் கோயிலிருக்கவும் கண்டான். அம்மலை அடிவாரத்தில் வந்து தங்கி சற்று இளைப்பாறினான். அங்குள்ளாரை இது என்ன கோயில் என்று வினவினான். அவர்கள் இது திருக்கழுக்குன்றம் என்றும், இம்மலையைப் பிரதக்ஷிணம் செய்து வந்தால், சகல ரோகங்கள் நிவிர்த்தியாவது பிரத்தியக்ஷ அநுபவ மென்றும் சொன்னார்கள். இந்த கர்மரோகியின் மனம் ஒருவாறு சமாதானமடைந்து, அவர்கள் சொற்படி சங்கதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, கிரிப் பிரதக்ஷிணம் செய்து வந்தான். இவ்வாறு ஒருமண்டலம் பிரதக்ஷிணம் செய்தும், இவனது சரீர பாதை நீங்கவில்லை; கஷ்டம் அதிகப்பட்டது. அதிகமான கஷ்டத்தையும் சஹித்துக்கொண்டு ஓர் நாள் விடிய 3-மணிக்கு எழுந்து, சங்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, தட்டித்தடுமாறி நடந்து, அடிவாரம் வந்து, சிவபெருமானை வணங்கி, "ஏழைபங்காளா! இன்றோடு என்வாழ்நாள் முடிவுபெற வேண்டியிருக்கும். இனி இப்பிராணனை வைத்துக்கொண்டு இச்சரீரத்தில் பாதை

யை அநுபவிக்க என்னால் முடியாது" என்று சொல்லி, சிறுநடையாய் நடந்தான்; ஆங்காங்கு உட்கார்ந்தான்; சிலச்சில இடத்தில் தவழ்ந்தான்; கோடிவிநாயகர் கோயிலுக்கருகே வந்தான்; நிலத்தில் படுத்தான்; அது வரையுந்தான் அவன் பிரக்ஞையோடிருந்தது; உடனே மூர்ச்சையானான்; உலகத்தோற்றத்தை மறந்தான்.

சர்வஜீவ தயாபராகிய சிவபெருமான் பெருங்கருணையோடு மூர்ச்சையாய் விழுந்துகிடக்கும் வியாதியஸ்தனிடம் ஓர் பரதேசிக் கோலங்கொண்டு, விபூதி-ருத்திராக்ஷ தாரியாய் வந்து, அந்த வியாதியஸ்தனைத்தட்டி எழுப்பி, "யாரப்பா! இங்கு படுத்துறங்குவது? பொழுதுவிடியு நேரம் சமீபித்ததே! ஜனங்கள் நடமாடும்சமயமீது! நடு ரோட்டில் படுத்திருக்கிறாய்" என்னலும், சிவ பெருமான் திருக்கரம் பட்டமாத்திரம், வியாதியஸ்தன் தூங்கி எழுந்தவன்போல் எழுந்து, "ஐயா! நான் சரீரத்தில் தாங்கொணாக் கருமநோயால் கஷ்டப்பட்டுப் பிராணத்தியாகம் செய்து கொள்ள நிச்சயித்து, உற்றார்-பெற்றார்-உறவின் முறையார்-பெண்டு பிள்ளைகள்-வீடு வாசல்-ரொக்கரோஜனம் எல்லாவற்றையும் மறந்து இங்கு வந்தேன். இங்குள்ளார் பலரது கேள்வியின் பேரில் ஒருமண்டலத்துக்குமேல் இம்மலையைப் பிரதக்ஷிணம் செய்தேன். சுகம் ஒன்றும் பெறாவிட்டாலும் சரீரபாதைமாத்திரம் அதிகமாயிருக்கிறது. இன்று சரீரபலம் ரொம்பவும் குறைந்து, நடக்கச்சக்தியற்று, தவழ்ந்தும் நடந்தும் புரண்டும் இங்கு வந்தேன்; மயக்கமானேன்; அவ்வளவுதான் நான் அறிந்தது" என்றான். பரதேசியாய் வந்த மலையாண்டவன் "அப்பா! பயப்படாதே! எல்லாம் கடவுள் செயல்! வினைவிதைத்தவன் வினையறுப்பான்; பூர்வம் உன் கருமவினை இவ்வளவு தூரம் உன்னை ஆட்டி வைத்தது; எழுந்துநில்! இதோபார்! மலையாண்டவன் எழுந்தருளியிருக்கும் நான்கு வேதங்களும் நான்கு பிரிவுகளாகத் தோற்றும்காக்ஷி; மலைக்கோயிலின் கோபுரதரிசனமும் - ஐந்து கோபுரங்களின் தரிசனமும், எல்லா கோபுரங்களின் தரிசனமும் ஒரேநோக்கில் தெரிகிறது பார்! கோபுர தரிசனம் பாப விமோசனம். உன் பாவங்கள் யாவும் இன்றோடே தொலைந்தது. இதோ இருக்கிறது "ம்ருத்திகை சஞ்சீவி" இந்த ம்ருத்திகையை எடுத்துச் சுத்த ஜலத்தில் கரைத்து, உள்ளுக்குச் சாப்பிடு; உன் கர்ம வினைகள் எல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். இதையே ஜலத்தில் குழைத்துச் சரீரமெல்லாம் பூசிக்கொள். சரீரத்திலுண்டான மேக சம்பந்தமான ரோகங்கள் யாவும்

பஞ்சாய்ப்பறக்கும்; கடவுளை நம்பு; உன் கவலை யாவும் ஒழியும்'' என்று சொல்லிமறைந்தார். வியாதியஸ்தன் திக்பிரமை கொண்டவனாய், பரதேசியார் குறித்துக்காட்டிய கோபுரங்களையே தரிசித்துக் கொண்டிருந்தவன் திரும்பிப் பார்த்தான்; தனக்கு உபதேசித்த பரதேசியைக் காணாது திகைத்தான். "என்ன ஆச்சரியம்! வந்த பரதேசியார்? அவரை நாம் கவனித்துப் பாராமலிருந்து விட்டேனே! எங்கு சென்றார்? அவர் போன வழி யாது?'' என்று இங்கு மங்கும் அலைந்து, எங்கும் காணப்பெறாதவனாய் வருந்தி, சிவ பெருமானே அடியேனது வினைகளைத் தடுத்தாட்கொள்ள வந்தவரென நிச்சயித்து, "எம்பெருமானே! ஏழை பங்காளா! சர்வஜீவதயாபர கருணாகரமூர்த்தி! மறைகளுக்கு மெட்டாது நீண்டு நீண்டு மறைந்து மறைந்து ஒளிக்கின்ற மணியே! பிர்ம்ம விஷ்ணு களுக்கு எட்டாத பேரின்ப வெளியே!'' என்று எனத் தோத்திரித்து, மெய்ம்மறந்து, சில நேரம் பொறுத்து, பரதேசியார் குறிப்பிட்ட இடத்திலுள்ள ம்ருத்திகையை (மண்) எடுத்து, அடுத்தாப்போலுள்ள கோடிவிநாயகர் தீர்த்தத்திலுள்ள ஜலத்தில் கரைத்து, உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலெல்லாம் பூசிக்கொண்டான். உடனே தன்மேனி பொன்னிறமாகத் தோன்றிற்று. நாற்பது வருஷகாலம் அநுபவித்துவந்த கருமவினைகள் யாவும் பஞ்சாய்ப் பறந்தது. பதினாறு வயது பாலகுமாரன்போல் விளங்கினான். கிரிப்பிரதக்ஷிணம் செய்வோர் எல்லோரும் பரிதாப நிலையில் நேற்றுவிளங்கிய வியாதியஸ்தன் இன்று அந்நிலைமாறி மன்மதன்போல் விளங்குவதைக்கண்டு ஆச்சரியமுற்று, அவனை விசாரித்தார்கள்; அவன் ஒன்றும் சொல்லத் தெரியாதவனாய், தன்னை வந்து கேட்போர் எல்லோருக்கும் இந்த மிருத்திகை சஞ்சீவி இருக்குமிடத்தைககாட்டி, இதுதான் சர்வ பாப கர்மங்களையும் சர்வரோகங்களையும் ஒழிக்வல்லதென்று சொன்னான்.

அன்றுமுதல், ஸ்ரீ வேதகிரிப்பெருமான் திருவருள் மஹிமையால் சரீர சுகத்தைப்பெற்ற வியாதியஸ்தன், தினந்தோறும் சங்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து கிரிப்பிரதக்ஷிணம் வந்து, இந்த இடமே முத்திநிலை யளிக்குமென்று, நம்பி, தனக்குக் காக்ஷி யளித்த பரதேசியார் நின்ற விடத்தில் கற்சிலையினால் திருவடிகள்செய்து வைத்து, சுத்தமான புஷ்பங்களால் அருச்சித்துப் பூஜித்து வந்தான். பிரதக்ஷிணம் வருவோரிடத்து அந்த இடத்தின் மஹிமையையும், பரதேசியார் தனக்குச் சுட்டிக்காட்டிய ம்ருத்திகை சஞ்சீவியால்

தான் அடைந்த பெரும் பேற்றினையும் சொல்வான். அவர்களால் உதவிய பணத்தைக்கொண்டு அங்கு ஓர் சிறு கோயில் நிர்மாணித்துத் தினசரி மூன்றுகாலமும் அபிஷேக அலங்காரத்தோடு பூஜித்து வந்தான். ஈதறிந்த ஜனங்கள் யாவரும் அந்த ம்ருத்திகை சஞ்சீவியை எடுத்துப் புசித்தும் மேலேபூசியும், திருவடிக் கோயிலைப்பிரதக்ஷிண நமஸ்காரம் செய்தும், தத்தம் வினைகளை நீக்கிக்கொண்டு சுகம் அடைந்தார்கள். வியாதிமாறி திட சரீரங்கொண்டு திருவடிக்கோயிலைச் சதாகாலம் ஆசார அநுஷ்டானத்தோடு பூசித்துவந்த திருவருள் சிகாமணியாகிய வியாதியஸ்தன் சிவபெருமானே தனக்குத் துணை யென்று நம்பி, சந்நியாசக் கோலங்கொண்டு, விபூதி ருத்திராக்ஷமணிந்து, திருவடிபூஜையிலேயே தன் காலத்தைக் கழித்துச் சிவலோக பதவி அடைந்தான்.

☞ (N. B.) குறிப்பு:—இச்சிறு கோயில் தற்போது ஏரிப் பேட்டையென்று வழங்கும் தேசிமுகப் பேட்டையில் செங்குந்தமரபினரைச் சார்ந்த குழந்தைவேலு முதலியார் வசமுள்ளது. இவர் பலபேரது பேருதவியினுல் திருவடிக்கு அபிஷேக அலங்கார தூப தீப ஆராதனைகள் கிரமமாக நடத்திவருகிறார். ம்ருத்திகை சஞ்சீவி எடுக்கும் இடம், ஜனங்கள் குளிர்ச்சிக்குத் தங்கி விடாயாற்றிக் கொள்ள, பல கனவான்களது பேருதவியால் கருங்கல் ஆசனங்கள் அமைத்திருக்கிறார். இந்த இடத்தில் மஞ்சள் புஷ்பம் புஷ்பிக்கும் வேப்பமரம் ஒன்று நவீனமாகத் தோன்றியிருக்கிறது ஆச்சரியம்.

## ஓர் அதிசய சம்பவம்.

1927-ம் வருஷத்தில் திண்டிவணம் தாலூகா ஜலபாதை என்னும் கிராமத்தில், யாதவ குலத்துதித்த குப்புசாமி என்னும் 35-வயதுடையவர், கர்ம ரோகத்தால் பீடிக்கப்பெற்று, செங்கல்பட்டு-திருமணியிலுள்ள குஷ்டரோக ஆஸ்பத்திரியில் பல நாள் சிகிச்சைக்குட்பட்டுச் சுகமொன்றும் ஏற்படாமல், திருக்கழுக்குன்றம் வந்து, பிரதக்ஷிணம் செய்து, மலை மருந்து எடுக்கும் இடமாகிய திருவடிக்கோயிலினிடமாகத் தங்கி, பிரதக்ஷிணம் செய்யும் கனவான்கள்

கொடுத்த உணவைப் புசித்து, இராப்பால் ஸ்ரீவேதகிரிப் பெருமானைத் தியானம் செய்து கொண்டிருந்தார். பக்த பராதீனராகிய சிவபெருமான், ஓர் நாள் அந்த கர்மரோகியின் சொப்பனத்தில், ஓர் பரதேசி ரூபமாகத் தோன்றி, மஞ்சள் புஷ்பம் புஷ்பிக்கும் அந்த வேம்பினடியை 1008-முறை பிரதக்ஷிணம் செய்யும்படி உத்திரவு செய்து மறைந்தார். உத்திரவுபடி ஒரே தினத்தில் 1008-பிரதக்ஷிணம் செய்யத் தன் சரீரம் இடம் கொடாமையால், தினசரி 21-பிரதக்ஷிணமாக 48-நாள் பிரதக்ஷிணம் செய்து பூர்த்தி செய்தார்; ரோகத்தினுல் பீடிக்கப்பெற்றிருந்த அவர் சரீரம் பொன்போல் விளங்குவதைக்கண்டு மகிழ்ந்தார்; தனக்குச் சுகத்தைத் தந்த அந்த இடத்துக்குத் தன்னுல் கூடிய தருமம் யாதாயினு மொன்று செய்ய மனங்கொண்டும், தனக்கு இயல்பு ஒன்றுமில்லையே யென்று வருந்தி நிற்கும் சமயத்தில், சென்னை சி-சஞ்சீவி செட்டி கப்பெனிக்குச் சொந்தக்காரர் அங்குவர, அவரிடம் தன் குறையினை விண்ணப்பித்தார்; மேற்படி சஞ்சீவி செட்டியார் அவரது வேண்டுகோளை அங்கீகரித்து, இரா முழுதும் பிரகாசம் கொடுக்கும்படியான ஓர் திருவிளக்கு ஒன்றை ஏற்படுத்தி, அன்று முதல் இன்றுவரையும் இத்தரும தீபம் இடையூறின்றி, திருவடிக்கோயில் பூஜைசெய்யும் குழந்தை வேலுமுதலியார் மூலமாக நடந்து வருவதைப் பார்க்கலாம்.

இந்த திருவடிக்கோயில் பிரதக்ஷிண சாலை வடகோடியி லிருப்பதால், கோடீஸ்வர ரென்றும், சஞ்சீவி எடுக்கு மிடத்திருப்பதால், சஞ்சீவிக் கோயிலென்றும், திருவடிப் பிரதிஷ்டை யிருப்பதால் திருவடிக்கோயிலென்றும் வழங்கி வருகிறது.

1931ஞு பிப்ரவரிமீ 19உ சுக்கிரவாரம் சென்னையில் வசிக்கும் குளத்தூர்-சோமு செட்டியார் குமாரர் தியாகராய செட்டியார் அவர்களால் சஞ்சீவி எடுக்குமிடத்தில் நாகலிங்கப் பிரதிஷ்டைசெய்து, அதற்கு திருக்கழுக்குன்றம்-ஜ்வாலாசாந்த குருமூர்த்தி, ஸ்ரீலஸ்ரீ. தி. அ. சுப்பராய தேசிகர் அவர்களால் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடத்தி, தினசரி அந்த நாகலிங்கத்துக்கு ஷை செட்டியார் அவர்கள் உதவியால், திருவிளக்கு பூஜை, நிவேதனம் கிரமமாக நடந்தேறி வருகிறது.

## கிரிப்பிரதக்ஷிண விதி:

கிரிப்பிரதக்ஷிணம் செய்வோர் விடியற்காலம் அதாவது சுமார் 4-மணிக்கு எழுந்து, நித்தியக்கடன்கள் அதாவது மல ஜலம் கழித்து, சங்கதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, நார்மடி அல்லது பட்டு அல்லது உலர்ந்த வஸ்திரம் உடுத்தி, விபூதி - ருத்திராக்ஷம் அல்லது திருமண்காப்பு அணிந்து, அவரவர் மதாசாரக் கொள்கைக்குரிய நித்தியானுஷ்டான ஜெப தபங்களை முடித்து, சிவ நாமம் அல்லது விஷ்ணுநாம உச்சரிப்போடு, வேதமலையைப் பிரதக்ஷணம் செய்தல் வேண்டும். பிரதக்ஷிணம் செய்யும் போது வீண் வார்த்தை பேசாமலும் குடும்பத்தொல்லைகளை நினையாமலும்; பகவானை மனதில் நினைத்தல் வேண்டும். அடிவாரத்திலுள்ள ஸ்ரீ சிந்தாத்ரீ கணபதியைத் தரிசித்துக்கொண்டு, அரச மரத்தை காலை 10-மணி வரையும் பிரதக்ஷிணம் செய்யலாம். அதற்குமேல் பிரதக்ஷிணம் செய்வது சாஸ்திர விரோதம். பிரதக்ஷணம் செய்து வரும்போது கோடி விநாயகர் கோயிலருகேயிருக்கும் ஸஞ்சீவி மலை மருந்தைக் குறிக்கும் திருவடிக் கோயிலுக்கருகேயுள்ள ம்ருத்திகையை ஜலத்தில் கலக்கி, உள்ளுக்குச் சாப்பிடலாம்; உடம்பிலும் பூசிக் கொள்ளலாம்

இந்த இடத்திலுள்ள அதிசயமான மஞ்சள் புஷ்பம் புஷ்பிக்கும் வேப்பமரத்தைப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்யவேண்டும். [ஈரவஸ்திரத்தோடும் தலைமயிரை அவிழ்த்தும், பாதரக்ஷை அணிந்து கொண்டும், பிரதக்ஷிணம் செய்யக்கூடாது. நடக்கச் சக்தியற்றவர்கள் சரீரமுழுதும் வெளியே காணும்படியான ஒற்றைமாட்டு வண்டியில் அமர்ந்து பிரதக்ஷிணம் செய்யலாம். (அசுபகாரியத்துக்கே ஈரவஸ்திரம் உடுத்தல் வேண்டும், மாலைப்பிரதக்ஷிணமுடிந்த பிறகு, தாழக்கோயிலில் மூவுலழகியென்கிற ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மனை 3-5-7-9-11-21-51-108 - அவரவர் சக்திக்கியைந்த அளவு பிரதக்ஷிணம் செய்யலாம். திருமலை ஸ்ரீ வேதகிரீஸ்வரருக்கும், தாழக்கோயிலில் ஸ்ரீ திரிபுர சுந்தரி அம்மாளுக்கும் தினசரி அல்லது மங்களவாரம் - சுக்கிர வாரந்தோறும் அஷ்டோத்தர சத நாமங்கள் - அல்லது சகஸ்ர நாமங்களால் அருச்சிக்கலாம் கிரிப்பிரதக்ஷிணம் காலை மாலை இருவேளைகளிலும் செய்யலாம். சரீர வலிவு குறைந்திருந்தால் காலை மாத்திரம் செய்வதில் குற்றமில்லை. காலை மாலை இருவேளை, சரீர இயல்பினை யறிந்து, ஸ்நானம் செய்யலாம். சந்தர்ப்ப

மில்லாவிடில், ஒருவேளை ஸ்நாநம் செய்யலாம். சரீரசுகம் கெடுதியாயிருந்தால், வெந்நீரில் ஸ்நானம் செய்து, பிரதக்ஷிணம் செய்வதில் குற்றமில்லை. இவ்வாறு 1-மண்டலம் (45-நாள்) அரை மண்டலம் (23-நாள்), கால் மண்டலம் (12-நாள்) பிரதக்ஷிணம் செய்து, கடைசிநாள் பிரதக்ஷிணபூர்த்தி செய்து, திருமலை சுவாமிக்கும் தாழக்கோயில் அம்மனுக்கும் தத்தம் சக்திக்கியைந்தவாறு அபிஷேகம் செய்து, சாதுப்பரதேசிகளுக்கு அன்னமிடுதல் வேண்டும். சவுகரிய மிருந்தால் நவக்கிரக சாந்தி செய்யலாம்

குறிப்பு:-மாதவிடாயாகும் ஸ்திரீகள், மாதவிடாயான 6-ம்நாள் முதல் 15-நாள் வரையும் பிரதக்ஷிணம் செய்து, மறுபடியும் மாதவிடாயாகிறவரை பிரதக்ஷணம் செய்யக்கூடாது. இவ்வாறு மூன்று 15-நாள் பிரதக்ஷிணம் செய்தால், ஒருமண்டலம் கணக்காகும்.

ஓம்

# மலைமருந்து பாடல்கள்.

செய்ப கமலத் திருவாழ்வளிக்கும் தியங்குமனத்
தைய மகற்றும் அறிவை கொடுக்கும் அடர்ந்தபிணி
நைய நறுக்கும் நமனை உருக்கும் நனிகடல்சூழ்
வையம் துதித்திடும் வேதகிரீசர் மலைமருந்தே. (1)

சூன்யம் போக்கும் பகை நீக்கும் வெய்ய சுரந்தவிர்க்கும்
ஞானமுண்டாக்கும் மதன்போற் றிகழ்வு நயந்துதவும்
ஈனம் தவிர்க்கும் பசாசுகள் பூதத்திடாகற்றும்
வானவர் போற்றிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (2)

சிர்கண்ட காமாலை தலைவலி பல்வலி சீதசுரம்
மூர்க்கம் செயும் விஷம் பீனசம் காசமுதற் பலநோய்
தீர்க்கும் சமன் வலிநீக்கி மண்மேல் வஜ்ரதேகம் தந்தே
மார்க்கண்டன் போல் வைக்கும் வேதகிரீசர் மலைமருந்தே. (3)

நிரந்தரம் செல்வம் தரும் ஒருக்காலு நிலைதளரா
புரந்தரன் மால் அயன் விண்ணோரியற்றிய பூசனைக்கு
உரந்தரும் கல்விதரும் சிவஞானத்துண்மை தரும்
வரந்தந்தருள் செயும் வேதகிரீசர் மலைமருந்தே. (4)

வருத்தைந் தெழுத்துன்னி கால் அசையாமல் கண் மூக்குநுனி
பொருத்திக் கருப்பை மடமாதர் கோள்மறை பூதரத்தை
அருத்தியுடமைர் தீவினை போக்கியுறும் பிறவி
வருத்தம் தணித்திடும் வேதகிரீசர் மலைமருந்தே. (5)

ஆதவுந் தீர்த்திடும் கயிலை யினுளு மருந்தி
சீதப்புனத்தடத்துள் மூழ்கி நித்தம் செயல் முடித்தே
ஓதியெழுத்தைந்தையும் அடிவாரத்திலுய்த்துரைப்ப
பாதை அறுத்திடும் வேதகிரீசர் மலைமருந்தே. (6)

விடந்தீர்க்கும் பல்வினை போக்கும் வலிய விறல் கொடுக்கும்
கொடுஞ் சூலைவாத குன்மங்கள் நீக்கும் குலைபகற்றும்
மடஞ்சேரு மின்னார்கள் வசிய முண்டாக்கும் வரமளிக்கும்
தடஞ்சேர் புயத்தினன் வேதகிரீசர் மலைமருந்தே (7)

பஞ்சமா பாதகந் தீர்க்கும எஞ்ஞான்று பரிவுடனே
தஞ்சமென்றே நம்பி உண்போர்க்கு அமுதசஞ்சீவி பொல்லா
வெஞ் சினத்தோர் செயும் குத்திரம் சாய்க்கும் விறல் கொடுக்கும்
வஞ்சகமகற்றிடும் வேதகிரீஸ்வரர் மலைமருந்தே. (8)

கொலைவினை குட்டம் கொலைநோய் குன்மம் கொலை கொடிய
பல்வினைதீய விடப்பாண்டு நோய் பஞ்சபாதகமும்
தொல்வினை யென்றும தொலைபா வினையும் தொலைத்தடியேன்
வல்வினை தீர்த்திடும் வேத கிரீசர் மலை மருந்தே. (9)

மூலவியாதி பொல்லாப்பாண்டு ரோகமுறு மூர்ச்சைவலி
சால உபாதிக்ஷய ரோகமியாவையுந் தானடக்கும்
பால சவுந்தரியோர் பாகன் மூவர் சொல் பாடல் கொளும்
மால் அயன் தேடிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (10)

நந்தித் தடஞ் சங்க தீர்த்தம் சம்பாதி மெய்ஞ்ஞானநதி
வந்திக்கில் வாழ்வருள் வளவா ரறைநின்
அந்திப்பிறை யணி வேதகிரீசர் மலைமருந்தைச்
சிந்திக்கில் வினைநீங்கி மெய்ஞ்ஞானமும் சேர்த்திடுமே. (11)

பள்ளிகொள் மாலயனும் வேதனும் தேடிபணிந்துவரும்
தெள்ளிய பூங்குழல் பெண்ணிலல்லாளொடு சேர்ந்துநிதம்
வள்ள லெனத்தகும் வேதகிரீசர் மலைமருந்தை
அள்ளியுண்டால் நமன் தெண்டனிட்டோடி அலறுவனே. (12)

மலைமருந்து பாடல் முற்றுப்பெற்றது.

## திருக்கழுக்குன்றம் உருத்திர கோடி மஹா க்ஷேத்திரம்
## ஸ்ரீ வேதகிரீஸ்வர் அஷ்டகம்.

வ்யோமா நிலாநல ஜலாசல சந்த்ரசூரிய
சைதன்ய கல்பித சரீர விராஜிதாய!
ருக்வாதி வேதகிரி ஸ்ருங்க நிகேதநாய
ஸ்ரீ ருத்ரகோடி நிலயாய நமஸ்ஸிவாய!! (1)

கற்பூர சங்க தவளா க்ருதி சந்த்ர காந்த
முக்தாபல ஸ்படிக வன்ஹிப விக்ர ஹாய!
கஸ்தூரி குங்கும ஹிமரம் புவிலேபநாய
ஸ்ரீருத்ர கோடி நிலயாய நமஸ்ஸிவாய!! (2)

ஸௌந்தர்ய நாயகி முகாம்புஜ பிருங்கபூத
சந்த்ரார்க்க வன்ஹி நிலயாய ஸதாஸிவாய!
அணிமாதி தாய கருணாம்ருத ஸாகராய
ஸ்ரீருத்ர கோடி நிலயாய நமஸ்ஸிவாய!! (3)

கங்கா சலாக்ர நிலயாய கலா மயாய
காமாந்தக த்ரிபுர தக்த விலேப நாய!
கங்காதராய கருடத்விஜ ஸேவிதாய
ஸ்ரீ ருத்ர கோடி நிலயாய நமஸ்ஸிவாய!! (4)

க்ருத்ரா ஜலேந்த்ர நிலயாய நிரீஸ்வராய
தத்வாதி ஸித்த ஸ பூஜித வந்திதாய!
சித்தாதி யோக புருஷாய திகம்பராய
ஸ்ரீ ருத்ர கோடி நிலயாய நமஸ்ஸிவாய!! (5)

பஞ்சாக்ஷராய பவஸாகர தாரகாய
பஞ்சர்ஸ்ய வர்ம வஸகாய பராத்பராய!
பஞ்சாக்ஷராய நிகமாசல நாயகாய
ஸ்ரீ ருத்ர கோடி நிலயாஸ நமஸ்ஸிவாய!! (6)

வேதாந்தமுக்ய விபவாய நிரீஸ்வராய
வேதாந்த வேத்ய ஸரஸாய விசக்ஷணாய!
வேதாய வேத தாரகாய விஷாயணாய
ஸ்ரீ ருத்ர கோடி நிலயாய நமஸ்ஸிவாய!! (7)

ஆதார சக்தி குடிலாஸன பஞ்சகாய
பர்ம்ஹாண்ட கல்பித கலாமய விக்ரஹாய!
ப்ரஸாத ஷோடஸ கலாமய விஸ்வமூர்த்தி
ஸ்ரீ ருத்ர கோடி நிலயாய நமஸ்ஸிவாய!! (8)

ஸம்பூர்ணம்.

நூலகம் 183814

☞ நீங்கள் உலகில் அதிர்ஷ்டசாலியாக வேண்டுமானால், அதிர்ஷ்டம் எப்போது நமக்கு வரும்? நாம் துக்கமின்றி உலகவாழ்க்கையை எப்படி நடத்தக்கூடும்? முதலிய பல ரகசியங்களை ஜோதிடசாஸ்திரிகள் உதவியில்லாமல் தாங்களே அறிந்துகொள்ளக் கூடியநூல் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டும்.

☞ இந்நூல் ஒவ்வொரு குடும்பத்தாரும் தாம் தாம் அநுபவிக்க வேண்டிய சுக துக்கங்களையும் லாப நஷ்டங்களையும் ஜோதிட சாஸ்திரிகளது சகாயமின்றி அறிந்துகொள்ளத்தக்கசக்தியைக்கொடுக்கும்.

# சோதிட ஆசிரியன் 1-2-3-4

## முப்பது தினத்தில் தானே சோதிடராக்கும் நூல்.

இந் நூலின் முதற்பாகம் அவரவர்கள் ஜெனனமானகாலத்தை அநுசரித்து, ஜென்ம லக்கினம், அம்ச லக்கினம் திசாபுத்திகள்முதவிய ஜோதிட ரகசியங்களை எளிதில் தாங்களே அறிந்துகொள்ள அநுகூலமாக இருக்கிறது. இரண்டாம் பாகத்தில்லக்ன பலன்-துவா தச பாவபலன் உடுமகா திசா புத்திகளின் பலன், அந்தரங்கள், அஷ்டவர்க்கம் போடும் வழி-களத்திர புத்திராதி தோஷநிவாரண பரிகாரம், ஜாதகன்பிறந்த வருஷம் மாதம் தேதி நாழிகையைக்கணக் கெடுத்து ஆராய்ச்சி செய்து ஏற்பட்ட லக்ன ஸ்தான முதல் பன்னிரண்டு ஸ்தானங்கள் வரையிலுள்ள பலாபலன்கள் அந்தந்த ஸ்தானங்களில் கிரகங்களின் உச்ச நட்பு ஆட்சி பகையினை அறிந்து, அதன் பலாபலன்கள், இராஜயோகம்—வறுமையோகம்—துர்க்குண புத்திரயோகம்-சற்குண புத்திர யோகம்-துஷ்டகளத்திர யோகம்-உத்தம களத்திரயோகம் முதலியன காட்டும்.



☞ 3-ம் பாகத்தில் நவக்கிரக ஸ்லோகம், வரலாறு, ஸ்தோத்ரம் பிரதக்ஷண விதி, அஷ்டோத்ரஸத (108)நாமங்கள் ஸகஸ்ர(1000)நாமாவளிகள், 9 படங்களுடன்சேர்க்கப்பட்டிருக்கிறது. நவக்கிரக படத்துடன் நவக்கிரக சாந்திகள்—நான்காம் பாகத்தில் லக்கின ஆயுள் நிர்ணயம்—கணித ஆராச்சியில் ஆண்பெண் அறிவது—விவாகப்பொருத்த நிர்ணயம், தாராபலன், பெண்களின் ருது தோஷங்கள், அதற்குப் பரிகாம், கண்டம், கண்டாதிகண்டம் முதலிய ஜோதிட ரகசியங்களையும் தமிழ் வழங்கும் தேயத்தார் யாவரும் சோதிடர் உதவியின்றி எளிதில் தெரிந்து கொள்ளலாம். இன்றே ஒருபுத்தகம் வரவழைத்துப் பார்க்கவும். இதில் நவக்கிரகஸ்தோத்திர சுலோகங்கள் விசேஷமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாகமும் தனித்தனிவிலை ரூபா 1-0-0.

4-பாகமும் சேர்ந்தது விலை ரூபா 3-8-0. தபாற்கூலி வேறு.

ஆரியன் டிராக்ட் புத்தகசாலை:- திருக்கழுக்குன்றம் (P. O.)

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவசியம் வேண்டிய புத்தகம் இது ஒன்று தான்.

# ஆயுர்வேத ஆசான்.

## (தெளிவான வசனம்)

☞ மனுஷ்யகோடிகள் ஒவ்வொருவரும் இவ்வுலகத்தில் ஜீவித்துள்ள வரையும் தத்தம் சரீரத்தை நோயில்லாமல் வைத்துக் காப்பாற்றி வரவேண்டியது அவரவர் கடமை. இல்லற வாழ்க்கையி லீடுபட்டவர்களாயினும் யோகாப்பியாசியாயினும் முற்றத்துறந்த முநியாயினும் ஆத்மதேவதை குடியிருக்கும் இச்சரீரத்தைப் போஷிக்கவேண்டியது அவசியம். அதற்கு முதலில் சரீரத்தைப்பற்றியும், அதன் தத்துவங்களைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும். இதற்கு ஆயுர்வேதமே சிறந்தது. அவ்வாயுர்வேதம் லக்ஷா திலக்ஷம் கிரந்தக்களையுடையது. அவற்றை ஒருவன் தன் புருஷஆயுளில் வாசித்துணர்வது அசாத்தியம். அக்குறையை நீக்குவான்வேண்டி "ஆயுர்வேத ஆசான்" எனப்பெயரிய ஓர் நூல் ஆயுர்வேதபண்டிதர் சை. ர. நமசிவாய ராஜயோகியார் அவர்களால் தொகுக்க வேண்டி நேரிட்டது இப் புத்தகமுள்ள குடும்பத்தில் ஆயுர்வேத பண்டிதர்களுக்கு வேலை யிராது. இப்புத்தகத்திலுள்ள விஷயங்களைக் கவனமாய் வாசித்தறிந்தால், தங்களைத் தாங்களே ரக்ஷித்துக்கொள்வதோடு, பிறருக்கும் சிகிச்சையாதி கிரமத்தோடு போதிக்கலாமென்பது அநுபவமாகக் கண்டறிந்த உண்மையாகும்.

☞ இதன் விலை ரூபா 2. (தபாற்கூலி வேறு)

சிவராஜயோகி பாக்கெட் டாக்டர் அணு 1.

நவக்கிரக ஸ்தோத்ரம் படங்கள்

சக்கரங்களுடன் (தமிழ்) அணு 8.

ஆதித்ய ஹ்ருதயம் (ஸ்தோத்ரயம்)

ஸ்லோகம் - பதவுரை, விசேஷார்த்தம் கூடியது அணு 2.